1982 மார்ச் 1]

புயல் பாதுகாப்பு மண்டபங்கள் கட்டும் திட்டம்.

*வினா எண். 284— திரு. த. இராமசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் ஆகிய பகுதிகளில் புயல் பாதுகாப்பு மண்டபங்கள் கட்டும் எண்ணம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அ மற்றும் ஆ : 20 இடங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் புதிதாகக் கட்டப்பட இருக்கின்றன. அதில் பாம்பன், தங்கச்சிமடம் ஆகிய ஊர்களும் சேர்க்கப்படும்.

திரு. த. இராமசாமி : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதியில் புயல் பாதுகாப்பு கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், கோர புயல் தாக்குதலுக்கு அடிக்கடி ஆளாகிக் கொண்டிருக்கும் இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் ஆகிய இடங்களில் இன்னும் அந்தப் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படவில்லை. கட்டுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவை துரிதப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவை துரிதப்படுத்தப்படும்.

திரு. த. இராமசாமி : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, புயல் பாதுகாப்பு கட்டிடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசின் உதவி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இல்லை.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புயல் பாதுகாப்பு மண்டபங்கள் புயல் வெள்ளக் காலங்களில் பயன்படுகின்றன. மீதி நேரங்களில். இந்த மண்டபங்கள் எதற்காக அரசு பயன்படுத்துகின்றது என்ற விவரங்களை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதியோர்களுக்கு கல்வி மற்றும் கல்யாணங்கள் போன்ற நல்ல காரியங்களை நடத்துவதற்கு, அதேபோல் மருத்துவ மனையாக அவை பயன் படுத்தப் படுகின்றன.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். தென் ஆற்காடு மாவட்டத்தில், பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டு, யாருடைய பராமரிப்பிலும் இல்லாமல் காலியாக இருக்கிறன என்பது அரசுக்குத் தெரியுமா ? மேற்கொண்டு, பிற்காலத்தில் யாருடைய கன்ட்ரோலில் அவை இருக்கும் என்பதை அறிவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். இப்போது சொல்லியிருக்கிறீர்கள். நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, பெரும்பாலும் மீனவர்களுக்காக இதுபோன்ற புயல் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்படுகின்றது. ஆனால், கட்டப்பட்டிருக்கின்ற இல்லங்கள் எல்லாம் மீனவர்கள் வசிக்கின்ற இடத்திலிருந்து வெகு தூரத்தில் இருக்கின்ற ஒரு குறைபாடு இருக்கிறது. பிற்காலத்தில் இப்படிப்பட்ட கட்டிடங்களைக் கட்டும்போது, தூரமாக இல்லாமல், மீனவர்கள் வசிக்கும் பகுதிக்கு ஒட்டியே கட்ட அரசு முன்வருமா ? மாநில அரசு நிதியிலிருந்து கட்டப்படுவதாகச் சொன்னார்கள். இதிலே தனியார், மற்றவர்கள் உதவி உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கட்டிடங்களைக் கட்டுகின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றவர்களும் பார்த்து, எங்கே கட்டவேண்டுமென்று ஆய்ந்தபிறகு கட்டுகிறார்கள். அவைகள் மீனவர்கள் பகுதியிலே இருக்க வேண்டுமென்பதல்ல. புயல், வெள்ளம் வருகின்றபோது, அதனால் கஷ்டப்படும் மீனவர்களுக்கும், மற்றவர்களுக்கும், குடிசைகளிலே இருப்பவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்க அவைகள் கட்டப்படுகின்றன. பெரும்பாலான கட்டிடங்களை இப்படி மாநில அரசு கட்டுகிறது. மற்றவர்களும் இதற்கு நிதி உதவி செய்கிறார்கள். இந்திய செஞ்சிலுவை சங்கம் உதவி செய்கிறது. அதேபோல், மற்றவர்களும், மகாராஷ்டிராவிலே உள்ள நிறுவனங்களும் நிதி உதவி செய்திருக்கின்றன. இப்படிப் பல நிறுவனங்கள் கொடுக்கின்றன. நிதியை வைத்துக்கொண்டு, இதைச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982 மார்ச் 1]

திரு. ந. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, புயல் பாதுகாப்பு இல்லங்கள் மேலும் 5 இடங்களில் தஞ்சை மாவட்டத்திலே கட்டப்பட இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, புயல், பாதுகாப்பு இல்லங்கள் எல்லா இடங்களிலும் கட்டப்படுகின்றன. அப்போது தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு பகுதியில் நிச்சயமாகக் கட்டப்பட மாட்டாது.

ஆசிரியர்களுக்கு திருப்பி அளிக்கப்பட வேண்டிய 'அடடா' பணம்.

* வினா எண் 285—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அவசர காலத்தில் ஆசிரியர்களிடமிருந்து அவசரமாக வசூலிக்கப்பட்ட அடடா (Adada) பணம் இன்னும் திருப்பிக் கொடுக்காமல் பல ஆசிரியர்கள் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) குறிப்பாக தனியார் துறை ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதால் அரசு துரித நடவடிக்கை எடுத்து திருப்பிக் கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். (அ) அரசுப் பள்ளி ஆசிரியர் அனைவருக்கும் திருப்பி அளிக்கப்பட்டு விட்டது என பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(ஆ) தனியார் பள்ளி ஆசிரியர்களின் (ADADA) அடடா சம்பந்தமான நடவடிக்கைகள் யாவும் மத்திய அரசின கீழ் இயங்கும் பிரதேச காப்பு நிதி ஆணையரால் (Regional P ov n fund commissione) நிர்வகிக்கப்படுகிறது. இவ்வைப்புத் தொகை மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டதல்ல. பள்ளி நிர்வாகம் நேரடியாக பிரதேச ஆணையருடன் தொடர்புகொண்டு இதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[முற்பகல் 9—20].

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, இந்த அடடா பணம் 1975 ஆம் ஆண்டே வசூல் செய்யப்பட்டது. இன்று வரைக்கும் அது பல இடங்களில் கொடுக்கப்படவில்லை. அது பற்றிப் பல புகார்கள் வந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே விரைவாக அதைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?